1971 ஜூலை 23]

8. மதுரை நகராட்சி, மாநகராட்சியாக்கப்பட்டிருப்பதால், சென்னை மாநகராட்சிக்குப் பொருந்தும் சம்பள ஆணைக் குழுவின் பரிந்துரைகள் மதுரை மாநகராட்சிக்கும் விரிவுபடுத்தப்பட வேண்டும்.

9. மதுவிலக்கை ரத்து செய்ய வேண்டும்.

10. குடிசைகளை மாற்றி அமைக்க வேண்டும்.

11. புறம்போக்கு நிலங்கள் ஒப்படை செய்யவேண்டும் என்று 11 கோரிக்கைகள் வைத்து இருக்கிறார்கள். இவை அரசாங்கத்தின் பரிசிலனையில் இருக்கின்றன.

கோரைக்கு விற்பனை வரி விலக்கு

* 403. வின.—திரு. கே. ஏ. வகாப்: மாண்புமிகு உணவு—வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

பாய் நெய்யும் கோரைக்கு விற்பனை வரி விலக்கு அளிக்கப் பட்டதன் மூலம் அரசு இழக்கும் தொகை என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பாய் நெய்யும் கோரைக்கு விற்பனை வரி விலக்கு அளிக்கப்பட்டதன் மூலம் ஒரு ஆண்டில் சுமார் ரூ. 30,000 அரசுக்கு வரி இழப்பு ஏற்படும்.

திரு. கே. ஏ. வகாப்: தலைவரவர்களே, ஏழைகளுக்கு நன்மை செய்யும் இது போன்ற வேறு வரி விலக்குகள் என்ன பொருள்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது? இன்னும் ஏதாவது கைவினைப் பொருள் களுக்கு வரி விலக்கு அளிக்கும் உத்தேசம் உண்டா? கைத்தறித் துணிகளுக்கு அளிக்கப்படும் ரிபேட் போல், இந்தக் கோரைப் பாய்களுக்கும் ரிபேட் அளிக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, எந்தெந்தப் பொருள்களுக்கு வரி விலக்கு அளித்து இருக்கிறோம் என்று கேட்டார்கள். தனிக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துத் தருகிறேன். ரிபேட் கொடுக்க முடியுமா என்று கேட்டார்கள். இதைத் தொழிலமைச்சரிடம் கேட்கவேண்டும்.

அரிசனங்களுக்கு கிராம அதிகாரிகள் பதவி

* 404. வின.—திரு. எம். முத்தையா: மாண்புமிகு உணவு—வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராமங்களில் கர்னம், கிராம முன்சீப் முதலிய வேலை களுக்கு அரிசன மக்களுக்கு விகிதாசாரப்படி வாய்ப்புக் கொடுக்கப் படுகிறதா?

(இ) இல்லை எனில், அதன் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) இல்லை.

(இ) தற்பொழுது உள்ள விகித முறையில் சலுகை காட்ட வாய்ப்பு இருப்பதால் விகிதாசாரப்படி வாய்ப்புக் கொடுக்க அவசிய மில்லை.